*11.* நிறுவனத்தின் இயக்கங்கள் :

**1. தேசிய மாணவர் படை (NCC):**

Duty and Discipline (கடமையும், ஒழுக்கமும்) என்ற குறிக்கோளுடன் *1984–85* கல்வியாண்டில் தேசிய மாணவியர் படைப்பிரிவு 50 மாணவியருடன்

செல்வி.மரியஅடைக்கலம் பொறுப்பாசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்டது. 22.05.87ல் திருமதி.ஏஞ்சல்ஸ் ராஜாமணி 60 மாணவிகள் குஜராத்தில் நடைப்பெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் கலந்து கொண்டு திரும்பினார். 2000ல் மரிய ஜாஸ்மின் சைனி என்ற மாணவி டெல்லியில் நடைப்பெற்ற துப்பாக்கிச் சுடும் போட்டியில் கலந்து கொண்டு சாதனை புரிந்தார். 2003–04ல் ஐ.யூ.சி கேம்பில் கலந்து கொண்டு துப்பாக்கிச் சுடும் போட்டியில் ஹ.பரியங்கா தங்கப்பதக்கமும் கே.நித்யா வெள்ளிப்பதக்கமும் பெற்றனர். 26.08.2000ல் ஒரு மாத முகாம் குவாலியரில் திருமதி. முத்துராணி கலந்து கொண்டார். இன்றும் 100 மாணவிகளை உறுப்பினராகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

தற்பொழுது திருமதி. விஜிலா இவ்வியக்கத்தின் Care Taker ஆக பொறுப்பேற்று செயல்பட்டு வருகிறார்.

**2. நாட்டு நலப்பணித்திட்டம்(NSS):**

"எங்களுக்காக அல்ல உங்களுக்காக" என்ற குறிக்கோளுடன் நாட்டு நலப்பணித்திட்டம் ஜூன் 2000ல் தொடங்கப்பட்டது. Each one Teach one என்ற திட்டத்தின் கீழ் எழுத்தறிவற்ற மக்களுக்கு எழுத்தறிவு போதிப்பதில் மாணவி லூர்து சுதா ஜனாதிபதி விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு அனுப்பட்டது எம் பள்ளிக்கு சிறப்பு சேர்த்தது. தற்போது திருமதி. மரிய இனிகோ வழிகாட்டுதலுடன் 50 மாணவிகளைக் கொண்டு சிறப்புடன் இயங்கி வருகிறது.

**3. YSM – இளம் மாணாக்கர் இயக்கம்:**

1970 லேயே இயங்கி வந்த இளம் கிறிஸ்தவ மாணாக்கர் இயக்கம் (YCS) 1990ல் இளம் மாணாக்கர் இயக்கம்(YSM) என்ற பெயரில் மாற்றுரு பெற்று சகோ.அந்தோணி மரிய லில்லி தலைமை அன்னையாக இருக்கும் போது ஆரம்பிக்கப்பட்டது. தன்னையும் பிறரையும் உருவாக்கி புதியதோர் சமுதாயத்தை படைப்போம் என்ற குறிக்கோளுடன் திருமதி. கன்னிகா ஆசிரியர் அவர்களின் பொறுப்பில் 60 மாணவிகளைக் உறுப்பினராக கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

**4. NGC - தேசிய பசுமைப்படை இயக்கம்:**

"பசுமை எங்கோ வளமை அங்கே" என்ற குறிக்கோளுடன் தேசிய பசுமைப்படை இயக்கமானது ஜூன் 2006ல் தலைமை அன்னை அருட்சகோ. பெட்ரிசியா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 50 மாணவிகள் வளாகத்தின் பசுமையைப் பாதுகாக்க

சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர். இவர்களை திருமதி. சுகாய மேரி பபிலா அவர்களும், சகோ. ஜான்சி அவர்களும் ஈடுபாட்டுடன் மாணவர்களை வழிநடத்தி வருகின்றனர்.

**5. Guides - சாரணியர் இயக்கம்:**

22.02.1971ல் அமலவை சபை அதிபர் Rev. Sr.என்னஸ்டின் அவர்கள் தலைமையில் சாரணியர் இயக்கம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அளவில் முதல் உதவிபயிற்சியில் அதிக மாணவிகள் கலந்து கொண்டதால் தொடர்ந்து 3 ஆண்டுகள் 2001–02 2002–03 2003–04 தமிழக ஆளுநர் விருது எம் பள்ளி பெற்றது. Be Prepared (எதற்கும் தயாராயிரு) என்ற குறிக்கோளுடன் 50 மாணவிகள் உறுப்பினராகக் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர். இதன் பொறுப்பு ஆசிரியர் திருமதி. இராஜேஸ்வரி.

**6. இளம் செஞ்சிலுவை இயக்கம்(JRC):**

"Health, Service, Friendship" என்ற குறிக்கோளுடன் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. 20.11.91 –23.11.91 மாநில அளவில் இளம் செஞ்சிலுவை இயக்க முகாம் நடைப்பெற்றது. தலைமை அன்னை சகோ. அந்தோணி மரிய லில்லி (Camp Director) முகாம் இயக்குநராக பொறுப்பேற்று வெகு சிறப்பாக 4 நாட்கள் நடத்தினார். தற்போதைய பொறுப்பாசிரியர் திருமதி.ச.மேரி அவர்களின் வழிநடத்துதலில் 60 மாணவிகள் இவ்விக்கத்தின் வழியாக பயன் பெற்று வருகின்றனர்.

**7. சிவப்பு நாடா கழகம் (RRC):**

எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக்காக Red Ribbon Club 2004–05 கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. விழிப்புடன் இருப்போம் வருமுன் காப்போம் என்ற குறிக்கோளுடன் 60 மாணவிகளை உறுப்பினராகக் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. மாணவிகளுக்கு தேவையான ஒழுக்கம் பற்றிய கருத்துகள் கூறப்படுகின்றன. மேலும் ஆண்டு தோறும் உலக எய்ட்ஸ் தினத்தை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். இதன் பொறுப்பாசிரியர் திருமதி. லதா டெய்சி.

**8. மனித உரிமை இயக்கம் (HRE):**

மனித நேயம் காப்போம் மனித உரிமை காப்போம் என்ற குறிக்கோளுடன் 1998–99 கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. தமிழ் முதுகலை ஆசிரியை சகோ.பத்ரீசியா அவர்கள் பொறுப்பேற்று சிறப்புடன் வழிநடத்தினார்கள். 2003–04 கல்வியாண்டில் மாவட்டத்தின்

சிறந்த பள்ளியாக தேர்ந்தெடுக்கப்பட்டது சிறப்புக்குரியது. இதில் 50 மாணவியர் திருமதி.அ.மேரி ஆசிரியையின் வழிநடத்துதலில் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

**9. அமலவைப் பெண்கள் இயக்கம்:**

"எழு! ஒளி வீசு!" என்ற குறிக்கோளுடன் அமலவைப் பெண்கள் இயக்கமானது 22.10.97 அன்று அமலவை அதிபர் அருட்சகோ.ஜோஸ்பின் அல்போன்ஸா அவர்களால் தொடங்கப்பட்டது. தற்போது 90 மாணவிகள் இவ்வியக்கத்தில் செயல்பட்டு வருகின்றனர். குறிக்கோளுக்கேற்ப சிறப்புடன் வழி நடத்தப்பட்டு வருகின்றனர். இக்வியக்கத்தின் பொறுப்பாசிரியர் சகோ. அமலியா மற்றும் சகோ. சேசு அவர்களின் வழிகாட்டலின் மாணவிகள் பயன் பெற்று வருகின்றனர்.

**10. பல்சமய இயக்கம்:**

மத நல்லிணக்கம் காப்போம் என்ற குறிக்கோளின் படி 2004 ஜூன் தலைமை அன்னை சகோ. அமலி ஜோசப் அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்டது அனைத்து மத விழாக்களையும் இவ்வியக்கம் இன்று வரை சிறப்பாகக் கொண்டாடி வருகிறது பல்சமய வாசகங்கள் காலை பிராத்தனையில் வாசிக்கப்பட்டு வருகிறது. ஆசிரியை திருமதி. மார்கிரேட் மேரி அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.